**<u>சுருக்கம்</u>**

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 – பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் – பொருண்மை வாரியாக நியமனங்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(அந1(1) துறை**

**அரசாணை (டி) எண். 127** **நாள்: 21.09.2021.**

பிலவ வருடம், புரட்டாசி 05,

திருவள்ளுவராண்டு 2052.

**படிக்கப்பட்டது: -**

1. அரசுக் கடித எண். 15580/2007-1, மனிதவள மேலாண்மைத்(ஏஆர்.3) துறை நாள் 19.10.2007.
2. அரசாணை (வாலாயம்) எண். 98, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(அந1)த் துறை, நாள் 14.07.2021.
3. அலுவலக ஆணை எண்.157, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அந1)த் துறை, நாள் 07.08.2021.

*******

**<u>ஆணை:</u>**

பொதுமக்களுக்கு தகவல்களை அதிகாரிகள் வழங்குதலை உறுதிசெய்திடவும், வெளிப்படத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை ஏற்படுத்திடவும் மத்திய அரசானது தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (மத்திய சட்டம் 22/2005) சட்டத்தினை இயற்றியது.

2. மத்திய அரசின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில், பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. மேலே-3இல் குறிப்பிட்டுள்ள அலுவலக ஆணையில் சார்புச் செயலாளர்கள் பொதுத்தகவல் அலுவலர்களாகவும், துணைச் செயலாளர்கள்/இணைச் செயலாளர்கள்/கூடுதல் செயலாளர்கள் (இந்திய ஆட்சிப்பணி தவர்த்து) மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலே 2-இல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் திரு. எம். செந்தில்வேலன், சார்புச் செயலாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக, தேசிய தகவல் மையம் தொடர்பு கொள்ளவும், மின்னணு முறையில் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும் பதிவேற்றம் செய்வதற்கான போதிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு பற்றாளராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார்.

**த.பி.பா.**

3. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தலைமைச் செயலகம் சார்பாக நியமனம் செய்யப்பட்டுள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களின் விவரம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-இல் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் வகுத்துள்ள உள் நடைமுறையின்படியும், பணிகளை மேற்கொள்வர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை கையாளும் பிரிவு/பொதுத்தகவல் அலுவலர், அது தொடர்பான பதிவேட்டினை பராமரிப்பார். இப்பதிவேடு துணைச் செயலாளர் அவர்களுக்கு மாதம் இருமுறை சமர்ப்பிக்கப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**
அனைத்து அலுவலர்கள் / சார்புச் செயலாளர்கள்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சென்னை-9.(இ)
அனைத்து துறைத் தலைவர்கள்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.(இ)
**நகல்**
மனிதவள மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.(இ)

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**தேர்வுநிலை பிரிவு அலுவலர்**

<u>இணைப்பு</u>

| பொருள் | பொது தகவல் அலுவலர் | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|
| **துணைச் செயலாளர் (அந)** | | |
| <u>'**அநமு1**' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>இந்திய ஆட்சிப்பணி தவிர்த்து இரண்டாம்நிலை அலுவலர்கள், நேர்முக செயலாளர்கள், நேர்முக உதவியாளர்கள் , நேர்முக எழுத்தர்கள் , தட்டச்சர்கள் மற்றும் உதவியாளர்கள் தொடர்பான பணியமைப்பு - பணியாளர் தொகுதிப்பட்டியல் தயாரித்தல் - மனிதவள மேம்பாட்டுத்துறை ஆய்வு - துறை செயலாளரின் அலுவல் ரீதியான பயணங்கள் - பற்றாளர்கள் நியமனம் - தகவல் தொழில் நுட்பத்துறை மற்றும் இணையவழி அலுவலகம் - பொதுவான பொருண்மைகள் | **சார்பு செயலாளர்** | **துணைச்செயலாளர் (அநமு)** |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்- 2</u><br>பிரிவு அலுவலர்கள், உதவிபிரிவு அலுவலர்கள், அனுப்புகை உதவியாளர், பதிவேடு உதவியாளர்கள், பதிவேடு எழுத்தர்கள், வாகன ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் தொடர்பான பணியமைப்பு - அரையாண்டு அலுவல்முறை அறிக்கை - இத்துறை அலுவலர்களுக்கான சட்டமன்ற பணி தொடர்பான அனுமதி சீட்டு | | |
| <u>'**அநமு2**' உதவிப் பிரிவு அலுவலர் -1</u><br>பணியாளர்களின் கடன் மற்றும் முன்பணம் வழங்குதல் விடுப்பு பயணச் சலுகை மற்றும் மருத்துவ சிகிச்சை செலவினம் மீளப்பெறுதல் - மனிதவள மேம்பாட்டுத் துறை மற்றும் அண்ணா மேலாண்மை நிலையம் நடத்தும் பயிற்சிகள் தொடர்பான பொருண்மைகள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர் -2</u><br>எழுதுபொருள் வழங்குதல் - தளவாடங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல் - கணினிகள், நகல் எடுக்கும் இயந்திரம், அச்சுப்பொருள் மற்றும் இதர அலுவலக உபகரணங்களை பராமரித்தல் - கணினிகள் வாங்குதல் - தொலைபேசி கட்டணம் , பயணங்கள், பெட்ரோல் மற்றும் சிற்றுண்டி செலவினங்களை தீர்வு செய்தல் - பொதுவான பொருண்மைகள். | | |
| <u>'**சிஏ**' உதவிப் பிரிவு அலுவலர்-1.</u><br>நுகர்வோர் கூட்டுறவு – நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை குறித்த அனைத்து பொருண்மை - அரியலூர், கடலூர், கரூர், கன்னியாகுமரி, மதுரை, மயிலாடுதுறை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் புதிய நியாய | **சார்பு செயலாளர்** | |

| | | |
|---|---|---|
| விலைக் கடைகளை தோற்றுவித்தல், அம்மா மருந்தகங்கள் துவக்குதல், நியாய விலைக் கடைகளை பிரித்தல் - நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை பணியாளர் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஊதிய உயர்வு, புதிய ஊதிய விகிதம், ஓய்வூதியம், ஓய்வூதிய பணப்பலன்கள் மற்றும் சீராய்வு மனுக்கள்– தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம். | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்- 2.</u><br>சென்னை, செங்கல்பட்டு, கோயம்பத்தூர், திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு , கள்ளகுறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, திருவாரூர், திருப்பத்தூர், தேனி மற்றும் வேலூர் மாவட்டங்களில் புதிய நியாய விலைக் கடைகளை தோற்றுவித்தல் - நியாய விலைக் கடைகளை பிரித்தல் – கூட்டுறவுத்துறை, சுய உதவிக் குழுக்கள் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களின் மீதான புகார் மனுக்கள் – பொதுவான பொருண்மைகள் | | |
| <u>'**சிபி**' உதவிப் பிரிவு அலுவலர் –1.</u><br>பல்வகை பொருண்மை தொடர்பாக இதர துறை, முகமைகள் நடத்தும் கூட்டம், இணையவழிக்கூட்டம், மாநாடு குறித்த பொருண்மை – அனைத்து செயலாளர்கள் கூட்டம் மாதாந்திர கூட்டம் - துறைசார் ஒருங்கிணைப்புக் கூட்டம் - கூட்டுறவுத்துறை சார்ந்த பலவகை கலந்த பொருண்மை - பலதரப்பட்ட விருதுகள் வழங்குதல் மதிப்பீடு மற்றும் பயன்பாடு குறித்த ஆய்வு - தமிழ்நாடு தகவல்தொழில்நுட்ப துறை சார்ந்த வழிகாட்டுதல்கள் - இத்துறை மற்றும் துறை தலைமை அலுவலகங்கள் தொடர்பான மின்ஆளுமை - சுதந்திரதின விழா உரை குறித்த பொருண்மைகள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்- 2</u><br>சிறப்பு கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான பொருண்மைகள் - தமிழ்நாடு கூட்டுறவு அச்சகங்கள் - கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான சட்டங்கள் (ம) விதிகள் தொடர்பான விளக்கங்கள் தவிர்த்து இதர துறைசார்ந்த கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான கோப்புகள் - பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் - கொரோனா தொடர்பாக வெளியிடப்படும் அறிவுறுத்தல்களை அனுப்புதல் மற்றும் நடவடிக்கை அறிக்கை அனுப்புதல் - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>'**சிஜே**' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள், 1988 தொடர்பான அனைத்து பொருண்மைகள் - கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் - மோட்டார் வாகனம் தவிர்த்து தேர்தல் ஆணையம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - தமிழ்நாடு சட்ட ஆணையம் - கூட்டுறவு சங்க சட்டம் மற்றும் விதிகளை நியூ இந்தியாவலைதளத்தில் பதிவேற்றம் செய்தல் | | |

| | | |
|---|---|---|
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டம், 1976 - தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள், 1983 மற்றும் 1988 தொடர்பாக பிற துறையிலிருந்து பெறப்படும் கோப்புகளில் விளக்கங்கள் மற்றும் குறிப்புரைகள் அளித்தல் - கூட்டுறவு சங்க தேர்தல் தொடர்பான அனைத்து மனுக்கள் (தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உட்பட) - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>‘**சிஎல்**’ உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>கூட்டுறவுச் சங்க பதிவாளர்களின் பணியமைப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள், சீராய்வு மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள் - கூட்டுறவு சார்பதிவாளர்கள், இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் இளநிலை ஆய்வாளர்களின் தற்காலிக பணிநீக்கத்தை மறுஆய்வு செய்தல் - கூட்டுறவு சார்பதிவாளர்கள் தொடர்பான விழிப்புப் பணி ஆணையம் மற்றும் நீதிமன்ற வழக்குகள் - கூட்டுறவு சார்பதிவாளர்கள் தொடர்பான புகார் மனுக்கள். | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - இளநிலை உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் இளநிலை ஆய்வாளர்கள் தொடர்பான பணியமைப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் - கூட்டுறவுத் துறையின் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை ஊழியர்கள் பணியமைப்பு - கருணை அடிப்படையிலான பணிநியமனம் – பொதுவான பொருண்மைகள். | | |
| **இணைச் செயலாளர் (உணவு)** | | |
| <u>‘ஏ’ உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனம் தொடர்பான பணியமைப்பு மற்றும் அனைத்து பொருண்மைகள் - தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சொந்த நிதியிலிருந்து கிடங்குகள் கட்டுதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் நடத்தப்படும் நியாய விலைக்கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் - நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் - நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகள் தொடர்பான வழக்குகள் அரியலூர், கடலூர், கரூர், கன்னியாகுமரி, மதுரை, மயிலாடுதுறை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களைச் சார்ந்த விழிப்பு | **சார்பு செயலாளர்** | |

| | | |
|---|---|---|
| பணி ஆணைய வழக்குகள் - தரக்கட்டுப்பாடு தொடர்பான அனைத்து பொருண்மைகள் - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்- 2</u><br>பணியமைப்பு தவிர்த்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து கிடங்குகள் கட்டுதல் - சென்னை, செங்கல்பட்டு, கோயம்பத்தூர், திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, திருவாருர், திருப்பத்தூர், தேனி மற்றும் வேலூர் மாவட்டங்கள் சார்ந்த விழிப்பு பணி ஆணைய வழக்குகள் - தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கீழ் செயல்படும் நியாயவிலைக்கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்கள் தொடர்பான புகார் - மத்திய சேமிப்புக்கிடங்கு நிறுவனம் - தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன சட்டம், 1951 மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன விதிகள், 1953 - தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன சட்டம், 1962 | | |
| <u>'பி' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>நெல் கொள்முதல் தொடர்பான அனைத்து பொருண்மைகள் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் பெறும் கடன் வசதிகள் - தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மாதாந்திர இருப்புப் பட்டியலை மும்பை ரிசர்வ் வங்கிக்கு அனுப்புதல் - ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாக பணம் பெறுதல் - அரிசி அரைவை முகவர் மற்றும் அரிசி அரைவைக் கட்டணம் நிர்ணயித்தல் - அரைவைக் கட்டண நிலுவையை தள்ளுபடி செய்தல் - சணல் பைகள் குறித்த பொருண்மைகள் - இந்திய உணவுக்கழகம் - நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்தல் மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் - அரிசி தொடர்பான அனைத்து பொருண்மைகள் - வெளிச்சந்தை குறைந்தபட்ச ஆதரவு விலை (டி) அரிசி (OMMS (D) Rice) - இந்திய பயிர் பதனிடும் தொழில்நுட்ப நிறுவனம் - குறிப்பிட்ட உணவுப்பொருள் (உரிமம் பெறுதல், சேமிப்பு அளவு மற்றும் நகர்வு வரன்முறைகள்) நீக்கல் ஆணை, 2002 - உணவுப் பொருட்கள்,நெல் மற்றும் அரிசி நகர்வு செய்தல் - தமிழ்நாடு அத்தியாவசியப் பொருட்கள் ( இருப்பு, விலை மற்றும் கணக்கு பராமரித்தல்) ஆணை,1977 - கூட்டங்கள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>அத்தியாவசிய பண்டங்கள் தொழில் பண்டங்கள் கட்டுப்பாட்டு ஆணை, 1955 - தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு உணவு மானியம் ஒப்பளிப்பு செய்தல் கொள்முதல் செய்யும் அரிசிக்கான விலை நிர்ணயம் செய்தல் - விற்பனை செய்யும் அரிசிக்கான விலை வித்தியாசத் தொகையினை மத்திய அரசிடமிருந்து மீளப்பெறுதல் - அந்தியோதயா | | |

| | | |
|---|---|---|
| அன்னயோஜனா திட்டம் - அரிசி தொடர்பான அனைத்து பொருண்மைகள் / செறிவூட்டப்பட்ட அரிசி மற்றும் இதர பொருண்மைகள் - தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 - தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் கூட்டம் - சமுதாய நல நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்கு உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்தல் - அம்மா உணவகத்திற்கு அரிசி வழங்குதல் - சிறுதானியங்கள் விநியோகம் செய்தல் - இருபது அம்சத் திட்டம் - அரிசி மற்றும் இதர பொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் - அரிசி அரைவை ஆலைகள் (ஒழுங்குமுறை மற்றும் உரிம விதிகள்), 1959 - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>'**சி**' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>இலவச எரிவாயு உருளை / அடுப்பு வழங்குதல் தொடர்பான பொருண்மைகள் - திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு தொடர்பான பொருண்மைகள் - சட்டமன்ற வினாக்கள் - நீதிமன்ற வழக்குகள் - மண்ணெண்ணெய் மற்றும் பயோடீசல் தொடர்பான பொருண்மைகள் - தமிழ்நாடு மண்ணெண்ணெய் (ஒழுங்குமுறை மற்றும் விற்பனை) ஆணை 1973 தொடர்பான பொருண்மைகள் சமையல் எண்ணெய் மற்றும் எண்ணெய் வித்துக்கள் தொடர்பான பொருண்மைகள் - உணவு பதனிடுதல் - உணவு பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு - உணவுத்துறை அமைச்சர் அவர்களின் கூட்டம் தொடர்பான பொருண்மைகள் - மண்ணெண்ணெய் பயோ டீசல் மற்றும் இதர பொருட்கள் தொடர்பான தமிழ்நாடு அத்தியாவசியப் பண்டங்கள் (இருப்பு மற்றும் விலை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்கு பராமரித்தல்) ஆணை, 1977 | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்- 2</u><br><br>சீராய்வு மனுக்கள் - மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் ஆரம்பித்தல் - மத்திய அரசு வழங்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்தல் - உணவுத்துறை தொகுத்தல் - மாண்புமிகு அமைச்சர் (உணவு) மற்றும் உணவுத்துறை தொடர்பாக கட்டடங்கள் மற்றும் புதிய அலுவலகங்களை காணொலிக்காட்சி வாயிலாக ஆரம்பித்தல் (ஒன்றுக்கு மேற்பட்ட கட்டடங்கள் மற்றும் அலுவலகங்கள் இருப்பின்) - பிரதம மந்திரியின் உஜவாலா யோஜனா திட்டம் - உணவு வீணாவதை தடுத்தல் - மண்ணெண்ணெய் மற்றும் இதர பொருட்கள் கட்டுப்பாட்டு ஆணைகள் - உணவுத் துறை தொடர்பான மாநில அரசின் உத்தரவாதம் - மண்ணெண்ணெய் மற்றும் பயோடீசல் மற்றும் தொடர்புடைய பண்டங்கள் சார்பான தொழில்சார் வணிக நிறுவன பதிவு செய்தல் மற்றும் உரிம ஆணை,1952 -உணவுத் துறையின் பலவகை பொருண்மைகள் - தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனம், மாநில நுகர்வோர் குறைதீர்மையம் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஆகிய | | |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களுக்கு தகவல்களை தொடர்புறுத்துதல் - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>'டி' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>உணவுத்துறை வரவு செலவு திட்ட மதிப்பீடு - அறிவிப்புகள் - பாராளுமன்ற நிலைக்குழு கூட்டம் - முதலமைச்சரின் துறை ஆய்வுக்கூட்டம் - மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு - நிதி ஆயோக் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - மாநில மேம்பாட்டு மன்றம் - மதிப்பீட்டுக்குழு தொடர்பான பொருண்மைகள் (கூட்டுறவுத் துறை மற்றும் உணவுத் துறை இரண்டிற்கும் சேர்த்து) சர்க்கரை, கர், கண்டசாரி,மைதா, கோதுமை மற்றும் கோதுமை - உப பொருட்கள் மற்றும் இதர பண்டங்கள் தமிழ்நாடு அத்தியாவசியப் பண்டங்கள் (இருப்பு மற்றும் விலை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்கு பராமரித்தல்) ஆணை, 1977 - மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் | **சார்புச் செயலாளர்** | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர் -2</u><br>சர்க்கரை, கர், கண்டசாரி,மைதா, கோதுமை மற்றும் கோதுமை உப பொருட்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - மாவு ஆலைகள் - பொங்கல் பரிசுத்தொகுப்பு - குடும்ப அட்டைதாரர்களுக்கு நிதியுதவி அளித்தல் - தேசிய மன்ற கூட்டம் - உணவுத்துறை சார்ந்த வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - தேசிய இடர்ப்பாடுகள் மற்றும் பருவமழை தொடர்பான கூட்டங்கள் தென்மாநில மன்ற கூட்டங்கள் - அம்மா உணவகத்திற்கு கோதுமை வழங்குதல் - சர்க்கரை, கர், கண்டசாரி,மைதா, கோதுமை மற்றும் கோதுமை உப பொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் - கோதுமை, மைதா மற்றும் இதர பண்டங்கள் தொடர்புடைய தொழில்சார் வணிக நிறுவன பதிவு செய்தல் மற்றும் உரிம ஆணை, 1952 - இத்துறையின் அனைத்து துறை தலைமை அலுவலர்களுக்கான சட்டமன்ற அனுமதி சீட்டு பெற்று தருதல் - நீக்கல் ஆணை (உரிமத் தேவைகள், இருப்புக் கட்டுப்பாடு,நகர்வு கட்டுப்பாடுகள்) பொது விநியோகத்திட்டம் தவிர்த்து குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் கட்டுப்பாடு ஆணை, 2002 - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>'எப்' உதவிப் பிரிவு அலுவலர் -1</u><br>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளை ஆரம்பித்தல் மற்றும் பிரித்தல் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – பொது விநியோகத்திட்டம் தொடர்பான பொருண்மைகள் – பட்டியலிடப்பட்ட பண்டங்கள் குறித்த பொருண்மைகள் – அத்தியாவசிய உணவு பொருட்களை நிவாரணமாக வழங்குதல் - மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல் - மின்னணு குடும்ப அட்டைகளுக்கு உணவு தானியங்கள் வழங்குவது குறித்த அனைத்து பொருண்மைகள் – சிறப்பு பொதுவிநியோகத் திட்டம் மற்றும் அதன் தொடர்பான பொருண்மைகள் – தமிழ்நாடு அத்தியாவசிய பண்டங்கள் - | **சார்பு செயலாளர்** | |

| | | |
|---|---|---|
| பருப்பு மற்றும் அது தொடர்பான பண்டமைகள் (இருப்பு மற்றும் விலை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்கு பராமரித்தல்) ஆணை, 1977 . | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர் -2</u><br>இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுவிநியோகத் திட்டம் – தமிழ்நாடு பட்டியலிடப்பட்ட பண்டங்கள் (வகைப்படுத்தப்பட்ட மற்றும் தரநிர்ணயம்) ஆணை - பல்வேறு வகையான பருப்புகள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் மற்றும் இதர பொருட்களை பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் இணைத்தல் மற்றும் அதனைக் கொள்முதல் செய்தல் தொடர்பான இதர பொருண்மைகள் – அம்மா உணவகத்திற்கு துவரம் பருப்பு விநியோகம் செய்தல் – பருப்பு மற்றும் அது தொடர்பான பண்டங்களுக்கு கட்டுப்பாட்டு ஆணை பிறப்பித்தல் - பருப்பு மற்றும் பல்வேறு வகையான பண்டங்களுக்கான தொடர்புடைய தொழில்சார் வணிக நிறுவன பதிவு செய்தல் மற்றும் உரிம ஆணை, 1952 - குறிப்பிட்ட உணவு பண்டங்களுக்கான நீக்கல் ஆணை (உரிமத் தேவைகள், இருப்புக் கட்டுப்பாடு,நகர்வு கட்டுப்பாடுகள்) பொது | | |
| <u>**'ஜெ'** உதவிப் பிரிவு அலுவலர் -1</u><br>அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் 1955 தொடர்பான மேல்முறையீடு பிரிவு 6(c) -ன் கீழான நீதிமன்ற வழக்குகள் மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் – கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை) தொடர்பான பணியமைப்பு தொடர்பான அனைத்து பொருண்மைகள் – பொது நிறுவனங்கள் குழு தொடர்பான அனைத்துப் பொருண்மைகள் | **சார்புச் செயலாளர்** | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர் -2</u><br>உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணியமைப்பு தொடர்பான அனைத்துப் பொருண்மைகள் – நீதிமன்ற வழக்குகள் மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான இணையதள குற்றங்கள் தொடர்பான பொருண்மைகள் – பொதுவான பொருண்மைகள். | | |
| **துணைச்செயலாளர் (பணிகள்)** | | |
| <u>**'சிஇ'** உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>இணைப்பதிவாளர் / கூடுதல் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நகர கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் தொடர்பான பணியமைப்பு - புதிய அலுவலகங்கள் தோற்றுவித்தல், அலுவலகங்களை மறு சீரமைத்தல் மற்றும் புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் - இணைப்பதிவாளர்கள் / கூடுதல் பதிவாளர்கள் மீதான புகார் மனுக்கள் - பொதுவான பொருண்மைகள் | **சார்பு செயலாளர்** | **துணைச்செயலாளர் (பணிகள்)** |

| | | |
|---|---|---|
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 9 ஏ ன் கீழ் பெறப்படும் இணைப்பதிவாளர்/ கூடுதல் பதிவாளர் குறித்த ஒழுங்குமுறை நடவடிக்கைகள் - இணைப்பதிவாளர் / கூடுதல் பதிவாளர்களின் பணி ஓய்வு குறித்த பொருண்மைகள் - இணைப்பதிவாளர் / கூடுதல் பதிவாளர்கள் வெளிநாடு செல்வதற்காக தடையில்லாச்சான்று வழங்குதல் | | |
| <u>'**சிஜி**' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>கூட்டுறவுத் துறையின் வரவு செலவு திட்ட மதிப்பீடு - மாநில திட்டக்குழுவின் திட்டங்கள் மற்றும் நிதி ஆயுக் தொடர்பான அனைத்து பொருண்மைகள் (கூட்டுறவுத் துறை ) - திட்ட வேலைகள் - மாண்புமிகு முதல்வர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - அரசின் சாதனைகள் - மாநில நிதிக்குழு -பயிர்காப்பீடு திட்டங்கள் - மாநில கூட்டுறவுத் துறை அமைச்சரின் மாநாடு - கூட்டுறவுத்துறை அமைச்சரின் கூட்டம் - மத்திய கூட்டுறவு வங்கி / கூட்டுறவு சங்கப் பதிவாளர் தொடர்பான கூட்டம் / மறு ஆய்வு - கூட்டுறவுத்துறை தொடர்பான திட்டங்கள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் வழக்குகள் உட்பட - தேசிய கூட்டுறவு வளர்ச்சி திட்டம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - மாண்புமிகு முதல்வர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர், கூட்டுறவத்துறை தொடர்பாக கட்டடங்கள் மற்றும் புதிய அலுவலகங்களை காணொலிக்காட்சி வாயிலாக ஆரம்பித்தல் (ஒன்றுக்கு மேற்பட்ட கட்டடங்கள் மற்றும் அலுவலகங்கள்இருப்பின்) - மாநில ஆள்சேர்ப்பு நிலையம் / மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் - அரசு உத்தரவாதத்தின் பேரில் அனுமதி - பொதுவான பொருண்மைகள் | | |
| '**சிஎச்**' உதவிப் பிரிவு அலுவலர்-1<br>கூட்டுறவுத்துறை அலுவலர்கள் அடிப்படைவிதி 110-114-இன்படி மாற்றுப் பணியில் செல்ல அனுமதி வழங்குதல்- கூட்டுறவுத்துறை அலுவலர்களின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பணப்பலன்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் அடிப்படை விதி 127ன் கீழ் பணியிடங்கள் தோற்றுவித்தல் - ஆதிதிராவிடர் / பழங்குடியின பணியாளர்களின் பணி நியமன பின்னடைவு / பற்றாக்குறை காலிப்பணியிடங்கள் தொடர்பான விவரங்கள் அனுப்புதல் - பொதுவான பொருண்மைகள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>தமிழ்நாடு அரசு அலுவலர்களின் நடத்தை விதிகள் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் சார்பான பொருண்மைகள் அ | | |

| | | |
|---|---|---|
| மற்றும் ஆ பிரிவு அலுவலர்கள் அடிப்படைவிதி 56 (2) ன் கீழ் கட்டாய ஓய்வில் அனுப்பப்படுவதை மறு ஆய்வு செய்தல் - கூட்டுறவுத்துறையின் ஓய்வுபெற்ற அலுவலர்களின் விடுப்பு வரன்முறைப்படுத்துதல் - கூட்டுறவுத்துறை அலுவலர்களின் முன்னூக்கச் சம்பள உயர்வு - கூட்டுறவுத்துறை அலுவலர்களின் பணி நீட்டிப்பு - மருத்துவ செலவினம் மீளப்பெறுதல் மருத்துவ நல நிதித் திட்டம் - தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியாளர்கள் குறித்த சிறப்பு விதிகள் - கூட்டுறவுத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தல் | | |
| <u>'**சிகே**' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - கூட்டுறவு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி - கூட்டுறவுத்துறை அரசு அலுவலகங்களுக்கான வாடகை மற்றும் மோட்டார் வாகனம், அலுவலக தளவாடங்கள் மற்றும் தொலைபேசி சார்ந்த பொருண்மைகள் - வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால்வள கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட சேவைகள் - சுதந்திரதின விழா அலங்கார ஊர்திகள் பொருட்காட்சிகள் - ஊதிய உயர்வு மற்றும் பொதுவான கோரிக்கைகள் குறித்து பணியாளர் சங்கங்களிலிருந்து பெறப்படும் மனுக்கள் - கூட்டுறவுத்துறை செயலாளர் அவர்களை சந்திப்பது தொடர்பாக சங்கங்களிலிருந்து பெறப்படும் மனுக்கள் - விழிப்பு பணி ஆணையம் தொடர்பான வழக்குகள் மற்றும் தொகுத்தல் - கூட்டுறவு கல்வி மற்றும் கூட்டுறவு சட்டம் இயற்றுதல். | | |
| <u>'இ' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>சென்னை, கோயம்பத்தூர், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, கடலூர், விழுப்புரம், வேலூர், தர்மபுரி, நாமக்கல், காஞ்சிபுரம், நீலகிரி, திருவண்ணாமலை, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு, திருப்பூர், மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து ஆட்கொணர்வு நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் சிறப்பு விடுப்பு மனுக்கள் - கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் பராமரிப்புச் சட்டம், 1980 மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் - மாநில ஆலோசனைக் குழுமம் மற்றும் மாநில ஆலோசனைக் குழுமம் அமைத்தல் - அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் மற்றும் அது தொடர்பாக மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பொதுவான பொருண்மைகள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், தேனி, சிவகங்கை, தஞ்சாவூர், நாகப்பட்டினம்,திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, அரியலூர், தென்காசி, மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து | | |

| | | |
|---|---|---|
| ஆட்கொணர்வு நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் சிறப்பு விடுப்பு மனுக்கள் - பொதுவான பொருண்மைகள் - கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் பராமரிப்புச் சட்டம், 1980 மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் - மாநில ஆலோசனைக் குழுமம் மற்றும் மாநில ஆலோசனைக் குழுமம் அமைத்தல் - பொது விநியோகத்திட்ட பொருட்கள் மடை மாற்றுதல் மற்றும் கசிதல் கட்டுப்பாட்டு ஆணை 2015 பிரிவு 11 மற்றும் 13 ன் கீழ் மாத மற்றும் காலாண்டு அறிக்கைகளை மத்திய அரசுக்கு அனுப்புதல். | | |
| <u>'ஜி' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>சட்டமன்ற வினாக்களை தொகுத்தல் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – உறுதிமொழிகள் மற்றும் சட்ட மன்ற வினாக்களின் ஆய்வு தொடர்பான பொருண்மைகள் – விலை கண்காணிப்புக் குழு மற்றும் அதன் தொடர்பான பொருண்மைகள் – வேளாண் விலை நிர்ணயக் குழு – பொதுவான பொருண்மைகள். | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>நீதிமன்ற வழக்குகள், நீதிமன்ற அலுவலர்களுக்கு கட்டணம் வழங்குதல் தொடர்பான அனைத்து பொருண்மைகளையும் தொகுத்தல் (கூட்டுறவுத் துறை மற்றும் உணவுத் துறை) – நீதிமன்ற வழக்கு கண்காணிப்பு முறை (CCMS), கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைசார்ந்த பொதுக் கணக்குக் குழு தொடர்பான பொருண்மை – தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கை பத்திகள் மற்றும் துறை சார்ந்த ஆய்வு அறிக்கைகள் (கூட்டுறவுத் துறை மற்றும் உணவுத் துறை), | | |
| <u>'எச்' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>தேசிய, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – தேசிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 மற்றும் தேசிய பாதுகாப்பு விதிகள் 1988 தொடர்பான அனைத்து பொருண்மைகள் – சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை – வெங்காயம் மற்றும் இதர பொருட்கள் கட்டுப்பாட்டு ஆணை – தமிழ்நாடு அத்தியாவசிய பண்டங்கள் வெங்காயம் மற்றும் இதர பொருட்கள் (இருப்பு மற்றும் விலை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்கு பராமரித்தல்) ஆணை, 1977 | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>காப்பீட்டுத் தொகை மீள வழங்குதல் – தன்னார்வல சுகாதார அமைப்புகளுக்கு தேசிய விருதுகள் வழங்குதல் – உலக நுகர்வோர் உரிமைகள் தினம் – மத்திய, மாநில நுகர்வோர் பாதுகாப்பு - பொதுவான கூட்டங்கள் – வரவு, செலவு திட்டம் மற்றும் தணிக்கைத் தடைகள் – நுகர்வோர் கல்விக்கு நிதியுதவி அளித்தல் – தொழில் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் | | |

| | | |
|---|---|---|
| 1951 மற்றும் வெங்காயம் மற்றும் இதர பொருட்கள் தொடர்பான தொழில்சார் வணிக நிறுவன பதிவு செய்தல் மற்றும் உரிம ஆணை,1952- பொதுவான பொருண்மைகள். | | |
| **துணைச்செயலாளர் (கடன்)** | | |
| ‘**சிசி**’ உதவிப் பிரிவு அலுவலர்-1<br>தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அரியலூர், கடலூர்,கரூர், கன்னியாகுமரி, மதுரை, மயிலாடுதுறை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களைச் சார்ந்த தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை சார்ந்த பணியாளர்கள்/ உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான புகார், குறை தீர் மனுக்கள், வழக்குகள் மேல்முறையீட்டு மனுக்கள், சீராய்வு மனுக்கள் - வேளாண் கடன் - ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி வழங்கும் சிறு மற்றும் நடுத்தர கடன் தொடர்பான மனுக்கள் - மத்திய கூட்டுறவு வங்கி தொடர்பான பொதுவான மனுக்கள் - மாநில கண்காணிப்புக்குழு - மாநில கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தல் - கூட்டுறவுத்துறை சார்ந்த போனஸ் மற்றும் கருணைத்தொகை - தமிழ்நாடு நிலவள வங்கிகள் சட்டம். | **சார்பு செயலாளர்** | **துணைச்செயலாளர் (கடன்)** |
| உதவிப் பிரிவு அலுவலர்- 2<br>சென்னை, செங்கல்பட்டு, கோயம்பத்தூர், திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, திருவாரூர், திருப்பத்தூர், தேனி மற்றும் வேலூர் மாவட்டங்கள் சார்ந்த தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை சார்ந்த பணியாளர்கள்/ உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான புகார், குறை தீர் மனுக்கள், வழக்குகள் மேல்முறையீட்டு மனுக்கள், சீராய்வு மனுக்கள் - தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் - மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுவின் அனைத்து பொருண்மைகள் - அம்மா வங்கி அட்டை - உயர்மட்ட குழு கூட்டம் - பொதுவான பொருண்மைகள் | | |
| ‘**சிடி**’ உதவிப் பிரிவு அலுவலர்-1<br>துணைப்பதிவாளர்களின் பணியமைப்பு மற்றும் பணியிட மாறுதல்கள் தொடர்பான பொருண்மைகள் - கூட்டுறவு சார்பதிவாளர் துணைப்பதிவாளராகப் பதவி உயர்வு பெறுதல் - கூட்டுறவு சார்பதிவாளர் துணைப்பதிவாளராகப் பதவி உயர்வுக்கான பட்டியல் - துணைப்பதிவாளர் வரையிலான தற்காலிகப் பணி நீக்கத்தினை மறு ஆய்வு செய்தல் - பொதுவான பொருண்மைகள் | | |

| | | |
|---|---|---|
| <u>உதவிப் பிரிவு அலுவலர்- 2</u><br>தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 9 ஏ ன் கீழ் பெறப்படும் துணைப்பதிவாளர் குறித்த ஒழுங்கு நடவடிக்கைகள் - துணைப்பதிவாளர் மீதான குற்றச்சாட்டு / புகார் மனுக்கள் - துணைப்பதிவாளர்கள் வெளிநாடு செல்வதற்காக தடையில்லாச்சான்று வழங்குதல் | | |
| <u>'**சிஎம்**' உதவிப் பிரிவு அலுவலர்-1</u><br>வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் தொடர்பான (APCMS) அனைத்து பொருண்மைகள் – தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED) தொடர்பான அனைத்து பொருண்மைகள் - நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கங்கள் – தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் - தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் வாயிலாக விலை கட்டுப்பாட்டு நிதி உதவியுடன் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்தல் – தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக உர விநியோகம் செய்தல் - வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மற்றும் விற்பனை இணையம் தொடர்பான விழிப்புப் பணி ஆணைய வழக்குகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் – தொடர் அளிப்பு மேலாண்மை – வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களின் கீழ் இயங்கும் நியாயநிலைக் கடையில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மீதான புகார்கள் – பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களை தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பிலிருந்து குறைந்தபட்ச ஆதார விலையில் வாங்குதல் - சிமெண்ட் கொள்முதல் செய்தல் தொடர்பான அனைத்து பொருண்மைகள் | | |
| <u>உதவிப் பிரிவு அலுவலர்-2</u><br>நபார்டு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் - சேமிப்புக் கிடங்குகள் கட்டுவது தொடர்பான அனைத்து பொருண்மைகள் - நபார்டு வங்கி மற்றும் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் - சேமிப்புக் கிடங்குகள் கட்டுவது தொடர்பான உயர்மட்டக் குழு கூட்டம் - துடியலூர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - கூட்டுறவு விவசாயிகள் சேவை சங்கங்கள் தொடர்பான அனைத்து வழக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் - கூட்டுறவு சேமிப்பு வசதி - தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் நுண்ணீர் பாசன திட்டங்கள் - பொதுவான பொருண்மைகள் | | |

| | | |
|---|---|---|
| **'சிஎன்'** உதவிப் பிரிவு அலுவலர்-1<br>தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களின் பணியமைப்பு உட்பட - தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் தள்ளுபடி செய்யப்படும் கடன் தொகைகள் குறித்த புகார் மனுக்கள் - தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பிரித்தல் மற்றும் கட்டடங்கள் கட்டுதல் - பொதுச் சேவை மையங்கள் | | |
| உதவிப் பிரிவு அலுவலர்-2<br>தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பணியாற்றும் அலுவலர்கள், உறுப்பினர்கள் தொடர்பான மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்கள் - தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கப் பணியாளர்களின் விழிப்பு பணி ஆணைய வழக்குகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் புகார் மனுக்கள் - தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக்கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள், கட்டுநர்கள் தொடர்பான பொருண்மைகள் - கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் தொடர்பான பொருண்மைகள் - பொதுவான பொருண்மைகள் | | |
| **'சிப்பி'** உதவிப் பிரிவு அலுவலர்-1<br>பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயக் கடன் சங்கங்கள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - தொடக்க வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கிகளில் அடிப்படை விதி 127 ன் கீழ் பணி நீட்டிப்பு வழங்குதல் - தமிழ்நாடு மாநில வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வங்கி தொடர்பான அனைத்து பொருண்மைகள் மற்றும் புகார் மனுக்கள், குறைதீர் மனுக்கள், நீதிமன்ற வழக்குகள் மேல் முறையீடு மற்றும் சீராய்வு மனுக்கள் - பொதுவான பொருண்மைகள் | | |
| உதவிப் பிரிவு அலுவலர்-2,<br>நகர கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் - அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் சட்ட ஆலோசகர்களை நியமித்தல் - நகர கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடர்பான விழிப்பு பணி ஆணைய வழக்குகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கங்கள் தொடர்பான பொருண்மைகள் - பொதுவான பொருண்மைகள் | | |

| | | |
|---|---|---|
| **'சிஆர்'** உதவிப் பிரிவு அலுவலர்<br>முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் - உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மனுக்கள் மற்றும் தலைமைச் செயலாளர் அலுவலக மனுக்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்படும் அனைத்து மனுக்கள் - தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தொகுத்தல் மற்றும் தேசிய மனித உரிமை ஆணைய மனுக்கள் - எப்பிரிவையும் சாராத தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்கள் - அம்மா பணி அழைப்பு மனுக்கள் - பொதுவான பொருண்மைகள் | | |

**முகமது நசிமுத்தின்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

**தேர்வுநிலை பிரிவு அலுவலர்**